012957

இயக்குநர்
நிலஅளவை (ம) நிலவரித்திட்டம்
23 JUL 2020
850
சேப்பாக்கம், சென்னை-5

சுருக்கம்

நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம் – நிலஅளவை உட்பிரிவு, புலஎல்லை அமைத்தல், மேல்முறையீடு, புலப்பட நகல் வழங்குதல் மற்றும் கிராம, வட்ட, மாவட்ட வரைபடங்கள் வழங்குதல் – கட்டணங்கள் உயர்த்துவது –ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,
நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட அலகு, நிலஅளவை 2(2) பிரிவு

அரசாணை (நிலை) எண்:370

நாள்: 21.07.2020
சார்வரி வருடம், ஆடி 6,
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கவும்:–

1. அரசாணை (நிலை) எண்.819, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, நாள் 20.07.1987.

மேலும் படிக்கவும்:–

2. அரசாணை (நிலை) எண்.33, வருவாய்த் துறை, நாள் 23.01.2002.
3. அரசாணை (நிலை) எண்.206, வருவாய்த் துறை, நாள் 28.05.2002.

மீண்டும் படிக்கவும்:–

4. நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரின் கடித எண்.ந.க.ச6/26097/2017 (நிஅ), நாள் 05.12.2018 மற்றும் 16.12.2019.

*********

ஆணை:

மேலே முதல், இரண்டு மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில், பொது மக்களின் பயன்பாட்டிற்காக விற்பனை செய்யப்படும் புலஅளவீட்டு புத்தகப் பிரதி, புல எல்லைகளை சுட்டிக்காட்டும் பக்க எல்லை, கோணமானியை பயன்படுத்தி பக்க எல்லை பராமரிப்பு – நிலஅளவரின் முடிவுகளுக்கு எதிரான மேல்முறையீடு, உட்பிரிவு / பாகப்பிரிவினைக்கு முன்னர் நில உரிமையாளர்களின் விண்ணப்பத்தின் பேரில் புல எல்லைகளை நிர்ணயிப்பது, மேல்முறையீட்டின் பேரில் மறுஅளவீடு, நிலஅளவை குறியீட்டின் தொகை, மாவட்ட வரைபடம் (வண்ணம்/ எல்லைக்கோடு), வட்ட வரைபடம் (வண்ணம்/ எல்லைக்கோடு), நகரம் பிளாக் வரைபடங்கள், கிராம வரைபடம் மற்றும் உட்பிரிவுக் கட்டணம் ஆகியவற்றுக்கான கட்டணம் உயர்த்தி நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டன.

2) மத்திய நிலஅளவை அலுவலக இணை இயக்குநர் தலைமையில் தொழில்நுட்ப ஆலோசனைக்குழு (TAC) அமைக்கப்பட்டு, மேற்படி குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பொது மக்களின் பயன்பாட்டிற்காக விற்பனை செய்யப்படும் கிராம, வட்ட, மாவட்ட வரைபடங்கள் கட்டணம் (ம) உட்பிரிவு, புலஎல்லை அமைத்தல், மேல்முறையீடு புலப்படநகல் வழங்குதல், உள்ளிட்ட பணிகளுக்கு கட்டணங்களை பின்வருமாறு உயர்த்தி

/த.பி.பா./

நிர்ணயம் செய்யலாம் என்று மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்:—

| வ.எண் (1) | சேவை விபரம் மற்றும் வரைபடத்தின் வகை (2) | தற்போதைய கட்டணம் (ரூபாயில்) (3) | பரிந்துரைக்கப்படும் கட்டணம் (ரூபாயில்) (4) |
|---|---|---|---|
| (அரசாணை (நிலை) எண்.206, வருவாய்த்துறை, நாள் 28.05.2002—இல் நிர்ணயிக்கப்பட்டது) | | | |
| 1. | புலஅளவீட்டு புத்தகப் பிரதி (பக்கம் ஒன்றுக்கு) (Field Measurement book extract per page). | 20/— (A4 அளவு) | A4 அளவு—50/— A3 அளவு—100/— |
| 2. | புல எல்லைகளை சுட்டிக்காட்டும் பக்க எல்லைக்கான கட்டணம். [Fees for one 'F' line pointing out of Field boundaries (F-lines)] | 20 | 200 |
| 3 | கோணமானியை பயன்படுத்தி பக்க எல்லைகளை சுட்டிக்காட்டுதல்.(Fees for one 'F' line pointing out of Field boundaries using Theodalite) | 30 | 300 |
| 4 | பராமரிப்பு — நிலஅளவரின் முடிவுகளுக்கு எதிரான மேல்முறையீட்டிற்கு — ஒரு பக்க எல்லைக்கான கட்டணம்.(Fees for pointing out field boundaries (for one 'F' line) on appeal against the survey of maintenance field surveyor). | 50 | 400 |
| 5 | உட்பிரிவு / பாகப்பிரிவினைக்கு முன்னர் நில உரிமையாளர்களின் விண்ணப்பத்தின் பேரில் புல எல்லைகளை நிர்ணயித்துச் சுட்டிக்காட்டுவதற்கான கட்டணம். (Fees for pointing out the limits of boundaries of land owners in the joint holdings prior to sub division / partition on application). | புன்செய் நிலம் 30 நன்செய் நிலம் 50 | புன்செய் நிலம் 1000 நன்செய் நிலம் 2000 |
| 6 | மேல்முறையீட்டின் பேரில் மறுஅளவீட்டுக்கான கட்டணம் (Fees for re-measurement of sub-division on appeal). | புன்செய் நிலம் 60 நன்செய் நிலம் 60 | புன்செய் நிலம் 2000 நன்செய் நிலம் 4000 |
| 7 | நிலஅளவை குறியீட்டின் தொகை (நிலஅளவை முன்பணம்)(CSMB) செலவினங்களுக்காக கூடுதல் கட்டணம் [Surcharge levied on the Cost of Survey Marks (B)] | 400% | 800% |

| | | | |
|---|---|---|---|
| 8 | வரைபடங்களின் விலை (தாள் ஒன்றிற்கு) (Cost of Map per sheet) | | |
| a | மாவட்ட வரைபடம் (வண்ணம்) [District Maps (Colour)] | 189 | 500 |
| b | மாவட்ட வரைபடம் (எல்லைக்கோடு) [District Maps (Outline)] | 51 | 300 |
| c | வட்ட வரைபடம் (வண்ணம்) [Taluk Maps (Colour)] | 357 | 1000 |
| d | வட்ட வரைபடம் (எல்லைக்கோடு)[Taluk Maps (Outline)] | 51 | 500 |
| e | நகரம் பிளாக் வரைபடங்கள் (Town Block Maps) | 27 | 50 (ஒரு T.S எண்ணிற்கு) |
| | (அரசாணை நிலை எண்: 819, நாள்: 20.07.1987) | | |
| f | கிராம வரைபடம்(Village maps) | 85 | 200 |
| | (அரசாணை நிலை எண்: 33, நாள்: 23.01.2002) | | |
| g | உட்பிரிவுக் கட்டணம் (Sub division fees) | கிராமப்புறம் – 40<br>நகராட்சி – 50<br>மாநகராட்சி – 60 | கிராமப்புறம் – 400<br>நகராட்சி – 500<br>மாநகராட்சி – 600 |

அவ்வாறு உயர்த்தி வசூலிக்கப்படவுள்ள தொகையில் ஒரு பகுதியினை நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட துறையில் மென்பொருள் தயாரித்தல் மற்றும் மேம்படுத்துதல் உள்ளிட்ட பணிகளுக்குப் பயன்படுத்திட ஆணை வழங்குமாறும் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3) நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. பொது மக்களின் பயன்பாட்டிற்காக விற்பனை செய்யப்படும் கிராம, வட்ட, மாவட்ட வரைபடங்கள் கட்டணம் (ம) உட்பிரிவு, புலஎல்லை அமைத்தல், மேல்முறையீடு புலப்படநகல் வழங்குதல், உள்ளிட்ட பணிகளுக்கான கட்டணம் 2002–ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டு சுமார் 18 ஆண்டுகளாக இக்கட்டணம் நடைமுறையில் இருந்து வருகிறது. எனவே, கிராம, வட்ட, மாவட்ட வரைபடங்கள் கட்டணம் மற்றும் உட்பிரிவு, புலஎல்லை அமைத்தல், மேல்முறையீடு புலப்படநகல் வழங்குதல் ஆகியவற்றுக்கான கட்டணங்களை கீழ்க்கண்டவாறு (கலம் 4–இல்) உயர்த்தி அரசு ஆணையிடுகிறது:–

| வ. எண் (1) | சேவை விபரம் மற்றும் வரைபடத்தின் வகை (2) | தற்போதைய கட்டணம் (ரூபாய்) (3) | உயர்த்தப்படும் கட்டணம் (ரூபாய்) (4) |
|---|---|---|---|
| 1. | புலஅளவீட்டு புத்தகப் பிரதி (பக்கம் ஒன்றுக்கு) (Field Measurement book extract per page). | 20/–<br>(A4 அளவு) | A4 அளவு–50/–<br>A3 அளவு–100/– |

| | | | |
|---|---|---|---|
| 2. | புல எல்லைகளை சுட்டிக்காட்டும் பக்க எல்லைக்கான கட்டணம். [Fees for one 'F' line pointing out of Field boundaries (F-lines)] | 20 | 200 |
| 3 | கோணமானியை பயன்படுத்தி பக்க எல்லைகளை சுட்டிக்காட்டுதல்.(Fees for one 'F' line pointing out of Field boundaries using Theodalite) | 30 | 300 |
| 4 | பராமரிப்பு – நிலஅளவரின் முடிவுகளுக்கு எதிரான மேல்முறையீட்டிற்கு – ஒரு பக்க எல்லைக்கான கட்டணம்.(Fees for pointing out field boundaries (for one 'F' line) on appeal against the survey of maintenance field surveyor). | 50 | 400 |
| 5 | உட்பிரிவு / பாகப்பிரிவினைக்கு முன்னர் நில உரிமையாளர்களின் விண்ணப்பத்தின் பேரில் புல எல்லைகளை நிர்ணயித்துச் சுட்டிக்காட்டுவதற்கான கட்டணம். (Fees for pointing out the limits of boundaries of land owners in the joint holdings prior to sub division / partition on application). | புன்செய் நிலம் 30<br>நன்செய் நிலம் 50 | புன்செய் நிலம் 1000<br>நன்செய் நிலம் 2000 |
| 6 | மேல்முறையீட்டின் பேரில் மறுஅளவீட்டுக்கான கட்டணம் (Fees for re-measurement of sub-division on appeal). | புன்செய் நிலம் 60<br>நன்செய் நிலம் 60 | புன்செய் நிலம் 2000<br>நன்செய் நிலம் 4000 |
| 7 | நிலஅளவை குறியீட்டின் தொகை (நிலஅளவை முன்பணம்)(CSMB) செலவினங்களுக்காக கூடுதல் கட்டணம் [Surcharge levied on the Cost of Survey Marks (B)] | 400% | 800% |
| 8 | வரைபடங்களின் விலை (தாள் ஒன்றிற்கு) (Cost of Map per sheet) | | |
| a | மாவட்ட வரைபடம் (வண்ணம்) [District Maps (Colour)] | 189 | 500 |
| b | மாவட்ட வரைபடம் (எல்லைக்கோடு) [District Maps (Outline)] | 51 | 300 |
| c | வட்ட வரைபடம் (வண்ணம்) [Taluk Maps (Colour)] | 357 | 1000 |
| d | வட்ட வரைபடம் (எல்லைக்கோடு) [Taluk Maps (Outline)] | 51 | 500 |
| e | நகரம் பிளாக் வரைபடங்கள் (Town Block Maps) | 27 | 50 (ஒரு T.S எண்ணிற்கு) |
| f | கிராம வரைபடம்(Village maps) | 85 | 200 |

| | | | |
|---|---|---|---|
| g | உட்பிரிவுக் கட்டணம்<br>(Sub division fees) | கிராமப்புறம் – 40<br>நகராட்சி – 50<br>மாநகராட்சி – 60 | கிராமப்புறம் – 400<br>நகராட்சி – 500<br>மாநகராட்சி – 600 |

4) மேலே பத்தி 3–இல் கலம் 4–இல் ஆணையிட்டவாறு உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்டு, கட்டணங்களாக வசூலிக்கப்படும் தொகையினை முதற்கண் அரசுக் கணக்கில் உரிய கணக்குத் தலைப்பில் செலுத்துமாறும், அதன்பின் மென்பொருள் தயாரித்தல் மற்றும் மேம்படுத்துதல் உள்ளிட்ட பணிகளுக்குத் தேவையான செலவினத்திற்கு உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்பி நிதி ஒதுக்கீடு பெற்றுக்கொள்ளுமாறும் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5) இவ்வரசாணை உடனடியாக நடைமுறைக்கு கொண்டுவரப்படுகிறது.

6) இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.21535/நிதி (வருவாய்), நாள் 18.07.2020–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அதுல்ய மிஸ்ரா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம்,
சேப்பாக்கம், சென்னை– 600 005.
அனைத்து துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
அனைத்து மாவட்ட கருவூல அலுவலகங்கள்,
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
மாநில கணக்காயர், சென்னை – 600 035.

<u>நகல்:–</u>
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை
அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
அனைத்து தலைமைச் செயலகத்துறைகள், சென்னை – 600 009.
அனைத்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் பிரிவுகள்,
சென்னை – 600 009.
கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை முதன்மை நேர்முக உதவியாளர்,
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, சென்னை – 600 009.
நிதி(வருவாய்)த்துறை, சென்னை – 600 009.
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

22/7/2020
பிரிவு அலுவலர்.